[2016 பிப்ரவரி 19

(ஆ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர் அவர்கள்.

திரு. ஆர். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருண்ட தமிழகத்தை ஒளியேற்றிய ஒளி விளக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அரசு ஊழியர்களுக்கு சம்பள உயர்வு மற்றும் சலுகைகளை அவர்களே எதிர்பார்க்காத அளவிற்கு கருணை உள்ளத்தோடு இன்றைக்கு வாரி, வாரி வழங்கியிருக்கிறார்கள் என்பதைத் தொழிற்சங்கத் தலைவர் என்கிற முறையிலே இங்கே நான் பதிவு செய்ய விரும்புகிறேன். கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்களை நான் கேட்கிறேன், அரசு ஊழியர்களுடைய வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு நீங்கள் குரல் கொடுத்தீர்கள். ஆனால், இன்றைக்கு அவர்களே எதிர்பார்க்காத அளவிற்கு, சம்பள உயர்வு, பணிக்கொடை உள்ளிட்ட எல்லாவற்றையும் வாரி, வாரி கொடுத்திருக்கிறார்களே, பாராட்டுவதற்கு உங்களுக்கு மனம் இல்லை என்று சொன்னால். . . (குறுக்கீடு) நீங்கள் எங்கே சொன்னீர்கள்? பாராட்டுவதற்கு உங்களுக்கு மனம் இல்லை என்று சொன்னால், தொழிற்சங்கவாதிகள் என்று சொல்லிக் கொள்வதற்கு நீங்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். ஆகவே, இன்றைக்கு நான் சொல்கிறேன். தொழிலாளர்களுக்கு அம்மா அவர்கள் இன்றைக்கு வாரி, வாரி வழங்கி இருக்கிறார்கள். அதேநேரத்தில் கடந்த சட்டமன்றத் தேர்தலில் ஒரு எதிர்க்கட்சி வருவதற்கு வாய்ப்பினை உருவாக்கித் தந்தவர்களே புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பேசியதற்குத்தான் உறுப்பினர் பதில் சொல்கிறார், உட்காருங்கள்.

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பேசும்பொழுது பேசலாம், உட்காருங்கள்.

2016 பிப்ரவரி 19]

திரு. ஆர். சின்னசாமி: *ஆனால், அந்த எதிர்க்கட்சி, இன்றைக்கு எதிர்க்கட்சி என்கிற நிலையிலிருந்து எதிரிக் கட்சியாக மாறி இருக்கிறது. வரக்கூடிய 2016 சட்டமன்றத் தேர்தலில் தமிழகத்திலே ஒட்டுமொத்தமாக (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்கட்சியே இல்லை என்கிற நிலையை தமிழகத்திலே அம்மா அவர்கள் உருவாக்கித் தருவார்கள். அம்மா அவர்களை நம்பி மக்கள் உறுதியாக வாக்களிப்பார்கள். 234 தொகுதிகளின் சார்பாக இங்கே நீங்கள் யாரும் இருக்க மாட்டீர்கள். முழுவதும் நாங்கள்தான் இருப்போம். (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் நடக்கப் போகிறது. அதிலே எந்த சந்தேகமும் கிடையாது, அது உங்களுக்கே தெரியும்.*

ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். 1953-லேயிருந்து 14 சட்டமன்றத் தேர்தல்கள் நடந்திருக்கின்றன. 13 சட்டமன்றத் தேர்தல் வரையிலேயும் எல்லா கட்சிகளும் தேர்தல் வாக்குறுதி தந்தார்கள். ஆனால், எந்தக் கட்சியும் ஐந்தாண்டுகளுக்குள்ளாக கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றியதாக வரலாறே கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கொடுத்த வாக்குறுதிகளையும், கொடுக்காத வாக்குறுதிகளையும் இந்த 14-வது சட்டமன்றத்தில் நிறைவேற்றி, மக்களுடைய உள்ளங்களிலே நீங்காத இடம் பிடித்திருக்கிறார்கள். ஆகவே, 2016-ல் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி உறுதி, உறுதி என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். வருகிற 24 ஆம் தேதி அம்மா அவர்களுடைய பிறந்த நாள் வருகிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய 68-வது பிறந்த நாளுக்காக மனமார வாழ்த்தி வணங்குகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி, குழுவின் அறிக்கையை அளியுங்கள்.*

திரு. ஆர். சின்னசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2015-2016 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் ஏழாவது அறிக்கையை இக்குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*